

யாழ்ப்பாணம் - சுழிபுரம் மேற்கு

# அமரர். திரு. சு. முருகேசுவினதும்

# அமரர். திருமதி. மு. இலட்சுமியாரினதும்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26-07-2009

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - சுழிபுரம் மேற்கைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும்
உயர் சைவ வேளாண் குலமரபில் உதித்தவருமாகிய

## அமரர். திரு. சுந்தரம்பிள்ளை முருகேசு

அவர்களினதும்

அன்னாரின் வாழ்க்கைத் துணைவியாகிய

## அமரர். திருமதி. இலட்சுமியார் முருகேசு

அவர்களினதும்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

26-07-2009

உ

சிவமயம்


# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும், பண்போடும், எமை வளர்த்து
கல்வி புகட்டி எங்கள்
வாழ்வில் வழிகாட்டியாக இருந்து
எமது நலனுக்காக தன்னலம் பாராது
வாழ்ந்து இன்று தெய்வத்தோடு கலந்து
விட்ட எமது அன்புத் தெய்வங்களின்
பாதார விந்தங்களில் இம்மலரினை
காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்

உ
சிவமயம்



அன்னை மடியில்
16-02-1927

இறைவன் அடியில்
26-10-2008

# அமரர். திரு. சுந்தரம்பிள்ளை முருகேசு

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டுநல் சர்வதாரியில் அமைந்த நல் ஐப்பசியில்
ஒன்பதாம் நாள் அபரக்கத் துவாதசித் திதியில்
கண்டு புகழ் முருகேசு ஐயா பிறவிக்கடல் தாண்டிக்
கையிலையங்கிரி நாதனடி சேர்ந்தனன்.


அன்னை மடியில்
13-06-1934
25-06-2009
அமரர். திருமதி. இலட்சுமியார் முருகேசு
அவர்கள்
ஆண்டு நல் விரோதியில் அமைந்த நல் ஆனியில்
பதினோராம் நாள் நல் பூர்வபக்க துதியைத் திதியில்
ஈண்டு புகழ் இலட்சுமியார் அம்மா பிறவிக் கடல் தாண்டி
கைலயங்கிரி நாதனடி சேர்ந்தனரே.

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஓம் எனும் பிரணவரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா
வல்வினைகள் தீர்க்கும் சக்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்ஙனே போமாறேதோ
மாயாமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாழரவும் திணைக்கஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே.

## திருவாசகம்

அன்றே என்றான் ஆவியும்
உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக்கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறவுளறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசும் நாம் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

சீராரும் சதுர்மறையும் தில்லை வாழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடை சூழ்வைய மெலாமீடேற
ஏராருமணி மன்றுளெடுத்த திருவடி போற்றி.

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலத் துஞ்சித திரியாதே
கந்தனென் றென்றுற் றுனை நாளும்
கண்டு கொண்டின்புற்றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவ பாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங்குன்றிற் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

உ

## அன்பினால் உயர்ந்த உத்தமர்
## அமரர். திரு. சுந்தரம்பிள்ளை முருகேசு அவர்களினதும், அவர் வாழ்க்கைத் துணைவி அமரர். திருமதி. இலட்சுமியார் முருகேசு அவர்களினதும் இணைந்த இல்வாழ்வின்

# வாழ்க்கை வரலாறு

ஈழமணி திருநாட்டின் சிரமெனத்திகழும் யாழ் குடாநாட்டின் வடமேற்றிசையில் முத்தெனத் திகழ்வது சோழியபுரமென அழைக்கப் பெறும் சுழிபுரம் என்னும் புகழோச்சிய கிராமம் அதன் மேற்குப் பகுதியிலே செந்நெல் வயல்களும் ஒரு புறத்தே பறாளயம்பதி சிவசுப்பிரமணியர் ஆலயமும், ஈஸ்வர விநாயகர் ஆலயமும், தென்மேற்கே பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயமும், கிழக்கே வழக்கம்பரை அம்பாளும் சூழ்ந்து சிறப்பை பொழிந்து கொண்டிருக்கும் நற்பதியாம் சுழிபுரம் மேற்கிலே உயர் சைவ வேளாண் குருகுல பரம்பரையில் உதித்தவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்றுப் பின்னர், வேதாரணியத்தில் திருமுறைகளைப் பண்ணோடும் இசையோடும் சோர்வறாது ஓதுவதில் ஆற்றல் பெற்றவரும், 1910ஆம் ஆண்டிலிருந்து வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பிரபல பாடசாலைகளில் இசைத்துறை ஆசிரியராகவும் இருந்த திரு. சுப்பிரமணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள், அதே பதிதனில் வாழ்ந்த ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை அவர்களை வாழ்க்கைத் துணையாக அடைந்தார்.

சுந்தரம்பிள்ளை தம்பதியினருக்கு ஏகபுத்திரராக அமரர். திரு. முருகேசு அவர்கள் 1927ஆம் ஆண்டு அவதரித்தார். ஆனால் இவரின் போதாத காலம் இவர் பிறக்கும் போது இவரின் தந்தை இவ்வுலகவாழ்வை நீத்திருந்தார். தந்தையாரின் விருப்பங்களுக்கு அமைய ஆரம்பக்கல்வியை யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ

வித்தியாசாலையில் தமிழ் 8ம் தரம் சிறப்பாகச் சித்தியெய்தி உயர்படிப்பை விக்ரோறியாக் கல்லூரியில் தொடங்க இருந்த சமயத்தில் குடும்ப நிலமை காரணமாக அமரரின் சிறிய தந்தை முறையான வெற்றிவேல் அவர்களால் கொழும்புக்கு வியாபாரத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு தனது திறமைகளை வெளிக்காட்டினார்.

இவ்வாறிருக்கையில் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணிய சிறியதந்தை தனது சகோதரி மாதவர் அரியநாச்சி தம்பதியினரின் ஏகபுத்திரி அமரர். இலட்சுமியார் அவர்களை 1949இல் திருமணம் செய்து வைத்தார். இத்தம்பதியினரின் இறைபக்தியையும், சீரிய பண்புகளையும் கண்ட இறைவன் இவர்களுக்கு தங்கேஸ்வரி, சண்முகமூர்த்தி, சுந்தரமூர்த்தி, கிருஸ்ணமூர்த்தி, இராஜலிங்கம் என்னும் ஐவரை புத்திரர்களாக ஈந்தார்.

இவர்களின் மூத்த மகள் தங்கேஸ்வரி அளவெட்டியைச் சேர்ந்த விசுவலிங்கம் பரமநாதனை வாழ்க்கைத் துணையாக அடைந்ததன் பயனாக மயூரன், கவிதா எனும் பேரப்பிள்ளைகளைக் கண்டனர். இவர் தம் பேரப்பிள்ளைகள் மயூரன் உமாவையும், கவிதா, தயாபரனையும் திருமணம் செய்து பிரான்ஸ் நாட்டில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இவர்களின் இரண்டாவது மகன் சண்முகமூர்த்தி அராலி தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் நாகரத்தினத்தினம் தம்பதிகளின் மூன்றாவது புதல்வி நிர்மலகுமாரியைத் திருமணம் செய்துள்ளார். இவர்கள் இருவரும் ஆசிரியர்களாகப் பணி புரிகின்றனர். இவர்களின் தவப்பயனாக ரூபகாந்தன், காந்தரூபினி என்னும் பேரப்பிள்ளைகளைக் கண்டனர். இவர்கள் சொந்த மண்ணில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இவர்களின் மூன்றாவது மகன் சுந்தரமூர்த்தி வட்டு மேற்கைச் சேர்ந்த அருணாசலம் இரத்தினாம்பிகை தம்பதிகளின் இரண்டாவது புத்திரி பராபரியைத் திருமணம் செய்ததன் பயனாக அருண், இராகுலன், பிரணவி என்னும் மூன்று பேரப்பிள்ளைகளைக் கண்டுள்ளனர். இவர்களும் பிரான்ஸ் நாட்டில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இவர்களின் நான்காவது மகன் கிருஸ்ணமூர்த்தி புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சிவபாலசிங்கம் தங்கேஸ்வரிதேவி தம்பதியரின் புத்திரி அமிர்தாதேவியைத் திருமணம் செய்து இவர்களின் தவப்பயனால் நிஷாந், நிதுஷா, நிவிந் என்னும் பேரப்பிள்ளைகளைக் கண்டுள்ளனர் இவர்களும் பிரான்ஸ் நாட்டில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இவர்களின் ஐந்தாவது மகன் இராஜலிங்கம் சுன்னாகத்தைச் சேர்ந்த ஸ்ரீபாலச்சந்திரன் சறோஜினிதேவி தம்பதியரின் புத்திரி சுபத்திராவைத் திருமணம் செய்து றமிதா, கஜீபன் என்னும் பேரப்பிள்ளைகளைக் கண்டுள்ளனர். இவர்களும் பிரான்ஸ் நாட்டில் சிறப்புடன் வாழ்கின்றனர்.

இச்சிறப்புக்களுடன் இடையறாது தெய்வ நற்சிந்தனையுடன் வாழ்ந்திருக்கையில் அமரர்கள் இருவரும் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக சண்முகமூர்த்தி குடும்பத்தினரின் பராமரிப்பில் 2005இல் இருந்து அமரத்துவம் அடையும் வரை மகனாலும், மருமகளாலும், பேரப்பிள்ளைகளாலும் செவ்வனே பராமரிக்கப்பட்டனர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்னும் பொய்யாமொழிப்புலவரின் கூற்றுக்கு அமைய அமரர்கள் நித்தியானந்தப் பெருவாழ்வு பெற்றுள்ளனர். அமரர்களின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



## பிள்ளைகள் புலம்பல்

அழுதழுது நாம் வாழ எமை விட்டு எங்கு சென்றீர்
எமையெல்லாம் வேதனையில் துடிக்கவிட்டு எங்கு சென்றீர்
வேளையறிந்து உணவூட்டி பாசமழை பொழிந்து நின்றீர்
பட்டமரங்களாய் உணர்வற்றுக் கதியற்றுக் கலங்குகிறோம்
நேசக்கரம் நீட்டி ஆசைமொழி கூற இனியாருளர் இவ்வுலகில்
உலக நியதி இதுவோ? உண்மை யென்று யாமறியோம்
அனலில் இடப்பட்ட மெழுகாய் உருகுகிறோம் எம்
தெய்வங்களை எண்ணி
ஆறுதல் கூற இத் தரணியில் யாருளர்.

## மருமக்கள் புலம்பல்

பெற்ற மக்களைப் போல் பேணியெம்மை
உற்ற துயர் களையும் உத்தமர்களே
நோய் என்னும் வடிவில் கவர்ந்து சென்ற
கூற்றுவனுக்கும் கண்ணில்லையோ?
நெஞ்சு பொறுக்குதில்லை உங்கள் இழப்பை எண்ணி
நம்ப முடியவில்லை - நேற்றுவரை

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

எமைத் தூக்கி பாலூட்டி சீராட்டி
பல கதைகள் கூறித் தூங்க வைத்து
பாசத்தைப் பொழிந்து பக்குவமாய் எமை வளர்த்த
அன்பு உள்ளங்களை இனி எப்பிறப்பில் காண்போம்?

## தேற்றம்

இதயத்தை எண்ணம் வெல்லும்
இளமையை முதுமை வெல்லும்
மதியினை விதியே வெல்லும்
வாழ்க்கையை அறிவே வெல்லும்
வதைப்பட்ட நிலையில் இந்த
மனிதரை மரணம் வெல்லும்.

கடவுள் ஏன் மனித வடிவில் அவதாரம் செய்கிறார்? பூரண தெய்வத் தன்மையை மனிதனுக்கு காண்பிக்கவே இப்பகவத் அவதாரங்கள் மூலமாக மனிதன் கடவுளோடு பேசுகிறான். கடவுளின் திருவிளையாடல்களை அவனால் காணவும் முடிகிறது. பகவான் தனது ஒப்பற்ற திவ்விய ஆனந்தத்தை தாமே முழுவதும் அனுபவிப்பது போலுள்ளது. இப்படி அவதாரங்கள் எடுப்பது புஷ்பத்தின் ஒரு பக்கத்தில்தான் சிறிது தேன் உள்ளது அதேபோல, பகவானது அற்பபாகம் தான் பக்தர் மூலமாக மகான்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது.

(ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்)

### Seven Wonders of the Ancient World

The Pyramids of Egypt
The Hanging Gardens of Babylon
The Tomb of Mausolus Halicamassus
The Temple of Diana at Ephesu
The Colossus at Rhodes
The Statue of Jupiter at Olympus

உ

## நற்பெரும் பண்பாளர்கள்

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. மு. சண்முகமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார் அமரர். திருமதி. இலட்சுமியார் முருகேசு அவர்களின் மறைவு கேட்டுப் பாடசாலைச் சமூகம் ஆறாத் துயரில் ஆழ்ந்தது. குடும்பத்தின் பாசத்திற்கும் பண்பிற்கும் உறைவிடமாகத் திகழ்ந்தனர். வாழ்க்கையில் பேறுகளை எல்லாம் பெற்று சிறப்புற வாழ்ந்தவர் இறுதிக் காலத்தில் சிறிது நோயுற்று இருந்தாலும் அகவை எழுபத்தைந்தைப் பூர்த்தி செய்து இறைபதம் அடைந்தார். இவரது கணவர் அமரர். சுந்தரம்பிள்ளை முருகேசு அவர்கள் ஊரின் மத்தியில் பழுத்த மரம் போல பலருக்கும் பயன்தரும் பெரியார் இடைவெளியை நிரப்பிக் கொண்டிருந்தார்.

இறைபக்தி நிரம்பியவர் தன்னலம் கருதாதவர் எந்நேரமும் புன்முறுவல் பூத்த முகத்துடன் இருப்பவர். மகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் பலமான துணையாகவும் தூணாகவும் விளங்கினார்.

அணையா விளக்காக விளங்கிய அன்பு உள்ளம் கொண்ட விளக்குகள் அணைந்த போதும் எடுத்துக்காட்டாக விளங்கிய உரமான வாழ்வு எமது நினைவுகளில் என்றென்றும் ஒளிவீசும் அவர்களின் ஆத்மா சாந்தியடைய மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் பிரிவால் வாடும்
**அதிபர், ஆசிரியர்கள்.**
**யா/ பொன்னாலை**
**வரதராஜப்பெருமான் வித்தியாசாலை**

உ

# சுமை தாங்கிகளே இவர்கள்

நாம் பிறந்தோம் இருந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம்
நாம் பூவுலகில் வந்த நோக்கத்தை நிறைவு செய்தோமா?...
நாம் எதைச் செய்தோம் எம்மால் எதைச் செய்ய முடியுமென
நாம் நினைத்து அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதே மேலானது

அந்த வகையில் தனி ஒரு பெண்ணிற் பெருந்தகையாக வயலில்
அன்னை ஏரெடுத்துத் தந்தை தலைநகரில் தொழில் காத்தும்
குடும்பச் சுமையை
அன்புடன் இருவரும் தாங்கி ஆலமரம் போல பரிமளித்தார்கள்
அப்பாவின் குரல் கிராமத்தில் ஈமக்கிரியைகளில் ஒலிக்கும் ஆளுமை

இதை செயலில் வடிவமைத்தவர்கள் இவர்களே ஆவார்கள்
இதை எம்மால் செய்ய முடியும் என வாழ்ந்து காட்டினார்கள்
இவர்கள் நற்பிள்ளைகள் ஐவரைப்பெற்று வழிகாட்டினார்கள்
இவர்கள் மகவில் ஒரு மகன் எமது ஆசிரியத் துணையாக உள்ளார்.

பேரறிவுடைய மருமகளும் என் சக ஆசிரியையாக இருந்தார்
பேரப்பிள்ளைகளோ றெமிங்ரனின் மாணவ மணிகளாக மிளிர்ந்தனர்
பேரன்பு உடையோர் சீமையில் வதியும் இவர் சகோதரர்கள் குடும்பமே
பேருவகையுடன் வரவேற்பும், விருந்தோம்பும் பண்பும் மிக்கவர்களாக
விளங்கினார்.

இன்முகம் காட்டி இனியவை கூறும் இவர்களோ
நட்புடமை, முன்நிற்றல், எதையும் தாங்கும் இதயம், விவேகம்,
இசைவுடமையுடன் செயலாற்றுகை மிக்க குடும்பமாக விளங்கினர்
இங்கே பல படிப்பினைகளைக் கற்கலாம். இது ஓர் குடும்பப்
பாடசாலை

மரணித்த தம்பதிகளின் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**க. மனோகர்** J.P
மூளாய்
றெமிங்ரன் கல்வி வளர்சோலை
நிர்வாகி ஆசிரியர்

# இறைபக்தியோடு வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமர்கள்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. நிர்மலகுமாரி சண்முகமூர்த்தி அவர்களின் அன்பு மாமியார் அமரர் இலட்சுமியார் முருகேசு அவர்கள் உயர்ந்த பண்பும் அன்போடு பழகும் தன்மையும் மற்றவர்களுக்குத் தன்னால் இயன்றவரை உதவவேண்டும் என்ற உயர்ந்த எண்ணமும் கொண்டவர்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த இவர் தாயின் அரவணைப்பிலேயே குடும்பச் சுமையைத் தாங்கி வாழ்ந்தவர். அமரர். இலட்சுமியார் அவர்கள் கணவருக்கு உற்ற மனைவியாகவும், மருமக்களிற்கு மதிப்பான மாமியாராகவும், பேரப்பிள்ளைகளிற்கு அம்மம்மா, அப்பம்மாவாகவும் உற்றாருக்கு உதவி செய்த உறவினராகவும், ஆன்மீகத்தில் உயர்ந்த பற்றுள்ளவராகவும் வாழ்ந்தார். இவரது கணவர் சுந்தரம்பிள்ளை முருகேசு அவர்களும் பசியென்று வந்தவர்க்கு உணவு கொடுத்து இன்முகத்துடன் பரிவுகாட்டி தன்னால் இயன்றவரை உதவிபுரியும் பண்புள்ளவர் ஆலயங்கள் தோறும் சென்று தேவாரங்கள் புராண படனங்கள் ஓதும் ஆற்றலுள்ளவர்.

"தக்கார் தகவிலர் என்போர் அவரவர் எச்சத்தால் காணப்படுவர்" என்பதிற்கிணங்க நல்லறிவுள்ள நான்கு புதல்வர்களையும் ஒரு மகளையும் ஈன்றெடுத்து மூத்த மகனான மு. சண்முகமூர்த்தி அவர்களை அறிவு நூல் ஆசிரியராக்கியும் மற்ற மூன்று புதல்வர்களையும், மகளையும் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கிணங்க வெளிநாடு சென்று பொருள் சம்பாதிக்க வைத்தும் சிறப்பாக வாழ்ந்தனர்.

இவ்வாறாக சீரும், சிறப்புடனும் வாழ்ந்து இறுதியில் நோயுற்று சிலகாலம் படுக்கையில் இருக்கும் காலத்தில் மகனதும், மருமகளதும் பராமரிப்பில் இருந்து இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவலால் வாடும்
**அதிபர், ஆசிரியர்கள்.**
**யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம்**

உ



# அராலி ஆவரம்பிட்டி பதியுறை முத்துமாரி அம்மன் துதி

### காப்பு

மங்களஞ்சேர் அராலியூர் மன்னு முத்துமாரி - அம்மன்மிசை
துங்கமுள நற்பதிகம் சொல்லவே
திங்கட்புய மருவும் பணியணியும் பரமனுளந்தனில்
மகிழும் கஜமுக ஐங்கரனிருதாள் காப்பு.

### அம்மன் துதி

1) சுந்தரி சௌந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிரவாரந்தனில் உனைக்கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கிடுவாய்
சிந்தைதனில் உன்பாதம் தன்னையே தொழுமவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்
ஜெகமெல்லாம் உன்மாயை புகழ என்னாலாமோ
சிறியனால் முடிந்திடாது
சொந்தவுன் மைந்தனாய் எந்தனை இரட்சிக்க
சிறிய கடனுன்னதம்மா
சிவ சிவ மகேஷ்வரி பரமனிட ஈஸ்வரி
சிரோன் மணி மனோன்மணியும்
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
அநாதரட்சகியும் நீயே
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம் பிட்டியுறை
ஸ்ரீமுத்துமாரி அம்மை உமையே.

2) பத்து விரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகந் தண்டை கொலுசும்
பச்சை வைடூரியம் இச்சையாய் இழைத்திட்ட
பாதச் சிலம்பின் ஒலியும்
முத்து மூக்குத்தியும் இரத்தினப் பதக்கமும்
மோகன மாலை அழகும்
முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால்
முடிந்திட்ட தாலியழகும்
சுத்தமாய் இருக்கின்ற காதினிற் கம்மலும்
செங்கையிற் பொன் கங்கணம்
ஜெகமெல்லாம் விலைபெற்று முகமெலாம் ஒளிவுற்ற
சிறுகாது கொப்பினழகும்
அத்திவரதன் தங்கை சக்தி சிவரூபத்தை
அடியனாற் சொல்லத் திறனோ
அழகான அராலியிற் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீமுத்துமாரி அம்மையுமையே.

3) கெதியாக உந்தனைக் கொண்டாடி தினதுமுன்
குறைகளைச் சொல்லி நின்றும்
கொடுமையாய் என்மீது வறுமையை வைத்து நீ
குழப்பமாய் இருப்பதேனோ
சதிகாரி யென்று நான் அறியாமல் உன்தனை
சதமாக நம்பினே னே
சற்றாகிலும் மனது வைத்து என்னை இரட்சிக்க
சாதகம் உனக்கில்லையோ
மதிபோல ஒளிவுற்ற புகழ் நெடுங்கரமுடைய
மதகஜனையீன்ற தாயே
மாயனிட தங்கையே பரமனது மங்கையே
மயானத்தில் நின்ற உமையே
அதிகாரிஎன்று நரனாசையால் நம்பினேன்
அன்பு வைத்தே எனையாள்வாய்
அழகான அராலியில் புகழாக வாழ்த்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே!

4) பூமியிற் பிள்ளையாய் பிறந்தும் வளர்ந்தும் நான்
பேரான ஷ்தலமும் அறியேன்
பெரியோர்கள் தரிசனம் ஒருநாளும் கண்டு நான்
போற்றிக் கொண்டாடியறியேன்
வாமியென்றே எண்ணிச் சிவகாமியென்றே நான்
வாயினாற்பாடியறியேன்
மாதா, பிதாவினது பாதத்தை நானுமே
வணங்கியொரு நாளுமறியேன்
சாமியென்றே எண்ணிச் சதுருடன் கைகூப்பிச்
சரணங்கள் செய்து மறியேன்
சற்குருவின் பாதார விந்தங்களைக் கண்டு
சாஷ்டாங்க தெண்டனறியேன்
ஆமிந்த பூமியில் அடியனைப்போல மூடன்
ஆச்சி நீ! கண்டதுண்டோ
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரப்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

5) பெற்றதாய் என்றுன்னை மெத்தவும் நம்பி நான்
பிரியமாய் இருந்தனம்மா
பித்தலாட்டக் காரியென்று அறியாமல் உந்தன்
புருஷனை மறந்தனம்மா
பத்தனாய் இருந்துமுன் சித்தமும் இரங்காமல்
பாராமுகம் பார்த்திருந்தால்
பாலன்யான் எப்படி விசனமில்லாமலே
பாங்குடன் இருப்பதம்மா
இத்தனை மோசங்கள் ஆகாது! ஆகாது!!
இது தர்மமும் அல்லவம்மா
எந்தனை இரட்ஷிக்க சிந்தனைகளில்லையோ
இது நீதியல்லவம்மா
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மா! என்னம்மா!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

6) மாயவன் தங்கை நீ! மரகத வல்லி நீ!
மணிமந்தர காரி நீயே
மாயா சொரூபி நீ! மகேஸ்வரியுமானநீ!
மலையரையன் மகளான நீ
தாயே மீனாட்சி நீ! சற்குண வல்லி நீ!
தயாநிதி விசாலாட்சி நீ!
தாரணியிற் பெயர் பெற்ற பெரியநாயகியும் நீ!
சரவணனை ஈன்றவளும் நீ!
பேய்களுடனாடி நீ அத்தினிட பாகமதில்
பேர் பெற வளர்ந்தவருளும் நீ!
பிரசன்ன வல்லிநீ! பிரியவுண்ணாத முலையி நீ!
ஆயிமகமாயி நீ! ஆனந்த வல்லி நீ!
அகிலாண்ட வல்லி நீயே
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை! ஆவரப்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

7) பொல்லாத பிள்ளையாய் இருந்தாலும் பெற்றதாய்
புத்திகளைச் சொல்லவிலையோ
பேய்ப்பிள்ளையானாலும் தான் பெற்ற பிள்ளையைப்
பிரியமாய் வளர்க்கவிலையோ
கல்லாகிலும் மூச்சு கதறினான் அழுத குரலில்
கடுகதனில் எட்டிலொரு கூறுவதிலாகினுன்
காதினில் நுழைந்ததிலையோ
இல்லாத வன்மங்கள் என்மீதில் ஏனம்மா
இனிவிடுவதில்லைச் சும்மா
இருவரும் மடி பிடித்துத் தெருத்தனில் வீழ்வதும்
இது தர்மமும் அல்லவம்மா
எல்லாரும் உன்னையே சொல்லியே ஏசுவார்
இது நீதி யல்லவம்மா
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரப்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

8) முன்னையோர் ஜென்மங்கள் என்னென்ன பாவங்கள்
மூடனான் செய்தனம்மா
மெய்யென்று பொய் சொல்லி கைதன்னில் பொருள்தட்டி
மோசங்கள் பண்ணினேனோ
என்னமோ தெரியாது இக்கணம் தன்னிலே
இக்கட்டு வந்ததம்மா
ஏழை நான் செய்த பிழை தாய் பொறுத் தருள்தந்து
என் கவலை தீருமம்மா
சின்னங்களாகுது ஜெயமில்லையோ தாயே சிறுநாணமாகுதம்மா
சிந்தனைகள் என்மீது வைத்து நற்பாக்கியம்
அருள் சிவசக்தி காமாட்சி நீ
அன்னவாகனமேறி அனந்தமாகஉன்
அடியேன் முன் வந்து நிற்பாய்
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மையுமையே.

9) என்தனைப் போலவே ஜெனனமெடுத்தோர்கள்
இன்பமாய் வாழ்ந்திருக்க
யான் செய்த பாவமோ இத்தனை வறுமையில்
உன்னடியேன் தவிப்பதம்மா
உன்னையே துணையென்று உறுதியாய் நம்பினேன்
உன்பாதஞ் சாட்சியாக
உன்னையன்றி வேறுதுணை இனியாரையும் காணேன்
உலகதனில் எந்தனுக்கு
பின்னையென்றெண்ணி நீ சொல்லாமல் என்வறுமை
போக்கடித்து என்னை இரட்சி
பூலோகம் மெச்சவே பாலன் மார்க்கண்டன் போல்
பிரியமாய்க்காத்திடம்மா
அன்னையே இன்னமுன் அடியேனை இரட்சிக்க
அட்டி செய்யாதேயம்மா
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

10) பாரதனி லுள்ளளவும் பாக்கியத் தோடென்னை
பாங்குடன் இரட்சிக்கவும்
பத்தியாய் உன்பாதம் நித்தம் தரிசித்த
பாலருக்கருள் புரியவும்
சீர்பெற்ற தேகத்தில் சிறுபிணிகள் வாராமல்
செங்கலியன் அணுகாமலும்
சேயனிட பாக்கியம் செல்வங்களைத் தந்து
ஜெயம் பெற்று வாழ்ந்து வரவுங்
பேர்பெற்ற காலனைப் பின் தொடர வொட்டாமல்
பிரியமாய்க் காத்திடம்மா
பிரியமாய் உன்மீதில் சிறியநான் சொன்னகவி
பிழைகளைப் பொறுத்து இரட்சி
ஆறதனில் மணல்குவித்து அரிய பூசை செய்தவென்
அம்மை யோகாம்பரியும் நீயே
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
என்னம்மை! என்னம்மை!! ஆவரம்பிட்டியுறை
ஸ்ரீ முத்துமாரி அம்மை உமையே.

11) எத்தனை ஜெனனமெடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னில் அம்மா
இனியாகிலும் கிருபை வைத்தென்னை இரட்சியும்
இனிஜெனன மெடுத்திடாமல்
முத்திதர வேண்டுமென்று உன்னையே தொழுது
நான் முக்காலும் நம்பினேனே
முன்பின்னும் தோணாத மனிதரைப்போல நீ
முழித்திருக்காதேயம்மா
வெற்றிபெற உன்மீதில் பக்தியாய் நான்
சொன்ன விருத்தங்கள் பதினொன்றையும்
விருப்பமாய்க் கேட்டு நீ அளித்திடும் செல்வத்தை
விமலனார் ஏசப் போறார்
அத்தனிட பாகமதை விட்டு வந்தேனும்
என்னருங்குறையைத் தீருமம்மா
அழகான அராலியில் புகழாக வாழ்ந்திடும்
ஸ்ரீ முத்தமாரி அம்மை உமையே
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

**அமரர்களுக்காக மூத்தமகனின் சமர்ப்பணம்.**



உ
கணபதி துணை
ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தா மரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைப்பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞான
பொற்பதி கைலைக் குன்றினில் உறையும்
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்னுள்ளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞான தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னையடக்கமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்

ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணிகள்
நான்றெழுபாம்பி னாவினாலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின்ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசெனப்படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லாமனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள் வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருள்தருமானந்தத் தழுத்தி யென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருடன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



உ

சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம்

### திருவாசச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந்தேன்.

# சிவபுராணம்

(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்ற ண்ணிப்பான் றாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன்அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

விண்நிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கலப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேன் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்.



உ
முருகன்துணை

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலன ருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மைய னடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடையுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாடிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்ங்களும்
என்பெயர் சொல்ல இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்ற பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலையங் சூன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விரிப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காம மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்

பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உவந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் குளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கம்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்





உ

சிவமயம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன் றிநின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித் தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழிதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோமதிமப் பேடே

சகல கலாவல்லியே.
சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



உ

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருவெம்பாவை

*சக்தியை வியந்தது*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். (2)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். (3)

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொண் டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (4)

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். (5)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். (6)

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீ ரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லாமும்
சொன்னோங்கேள் வெவ்வெறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். (7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். (8)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். (9)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீ றாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். (12)

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கனலாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். (14)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவா சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடலோர் எம்பாவாய். (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். (16)

செங் கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாய்க்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்! (17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்! (18)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என் (று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயி(று) எமக்கேலோ ரெம்பாவாய்! (19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்! (20)

உ



மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாம் பூ மாலைத் தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகிர் அன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புற(ம்)நிலாமே
குனிமின் தொழுமினெங் கோன்எங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ண மிடித்து நாமே. 3

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 4

அறுகெடுப் பார் அயனும்மரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்கு
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண் மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்து நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை யன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 8

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு வென்னும் உலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டின மாடஆடச்
சித்தஞ் சிவனொடு மாடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடு மாடஆடப்
பிறவி பிறரொடு மாடஆடப்
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 17

அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
இயைந்தன முப்புர மெய்தல்பாடி
ஏழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்குத்
துன்பமு மாயின்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 20

திருச்சிற்றம்பலம்

உ

## பட்டினத்தடிகளார் தாயின் பிரிவின் போது பாடிய பாடல்

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபகலாயச் சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கே
வெரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டியிலு மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - மூட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
துந்துவளர்த் தெடுத்துத் தாமாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலோ தீமூட்டு வேன்.



# பொன்மொழிகள்

1) எதிர்பார்ப்புக் குறைவாக இருந்தால் ஏமாற்றமும் குறைவாக இருக்கும்

*- ஆபிரகாம இலிங்கன் -*

2) வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு.

3) போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன். ஆனால் காலம் வீணாகப்படுவதை இழக்கப்படுவதை நான் விரும்பமாட்டேன்.

4) போவதைக் கண்டு கலங்காமல் வருவதைக் கண்டு மயங்காமல் பயந்து பயந்து நடுங்காமல் கோபத்தினாலே குத்திக்காமல் இருக்கிறானே அந்த மனிதன் தான் உறுதியான அறிவு வாய்ந்தவன்.

*- பகவத் கீதை -*

5) எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது.

*- சுவாமி விவேகானந்தர் -*

6) கடின உழைப்பு, சோர்வில்லாத மனம், நல்ல விதி இவை மூன்றுமே எந்த ஒரு மனிதனதும் வெற்றிக்கு வேண்டியவை?

7) வேகம் இல்லாத விவேகம் வெறும் கனவு விவேகம் இல்லாத வேகம் வேருடன் அழிவு விவேகத்துடன் அணைந்த வேகம் வெற்றிவாயிலின் நுழைவு.

8) உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும். நிலை உயரம் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை உயரும்.

9) மனிதர்களை உருவாக்குவது உதவிகளல்ல தடைகள் தான் வசதிகள் அல்ல சிரமங்கள் தான்.

10) ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பது தான் பெருமை.

*- கவிஞர் - வாலி -*

11) உன்னைத் திருத்திக்கொள் சமுதாயம் தானாகவே திருந்திவிடும்.

12) மற்றவர்கள் "உன்னால் செய்யமுடியாது" என்று கூறுவதை செய்து காட்டுவதே வாழ்க்கையில் பேரின்பம் தருவதாகும்.

– வோல்ற்ர் பகேஹோட் –

13) கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள்.

– பில்ற்றன் –

14) அன்பு துன்பத்தை இன்பமாக்குகிறது பாசத்தை இலேசாக்குகிறது. கசப்பை இனிமையாக்குகிறது.

– டர்பன் ச. மு. பிள்ளை –

15) இதயமும், நாவும் சிறியவை ஆனால் அவைகள் ஒரு மனிதனின் உயர்வைக் காட்டுகிறது.

– ஜேர்மன் –

16) கடன் இல்லாதவன் பணக்காரன் உடல் ஆரோக்கியம் உள்ளவன் செல்வன்.

– யூகோஸ்லாவியா –

17) கடமையைச் செய் புகழ் உன்னைத் தேடி வரும். செல்வாக்கும், மதிப்பும் தானாகவே வரும்.

– சைவர் –

18) நீ துன்பப்பட வேண்டுமானால் உன்னை விடப் பணக்காரியை மணந்து கொள்.

– மைக்வெட் –

19) மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியன்று, குலமன்று, கருமனன்று, உயரமன்று, அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும்.

– வாரியார் –

20) அகங்காரத்தை விடுத்து மனிதன் தெய்வ நம்பிக்கையுடன் வாழ முற்பட்டால் நல்வாழ்வு வாழ இயலும்.

– சாயி பாபா –

21) கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்.

22) உன்நாவை அடக்கு அடக்கா விட்டால் அதுவே உனக்கு விலங்கிட்டு விடும்.

– லத்தீன் –

## வாழ்க்கையின் பரிமாணம்

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதை நழுவ விடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் அதை சென்று முடியுங்கள்
வாழ்க்கை ஒரு விடுமுறை அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் அதை வென்று காட்டுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி அதில் வெற்றி பெறுங்கள்
வாழ்க்கை ஒரு வேதனை அதை தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதில் எதிர் நீச்சல் போடுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதற்கு மனம் தளராதீர்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சனை அதற்கு தீர்வு காணுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி அதை ஏற்றுக்கொள்ளுங்கள்

## புத்தகம்

- உயிரின் சுவாசமல்லவா புத்தகம்
- உனக்குள் ஒரு ஆசிரியர் புத்தகம்
- நல்ல புத்தகம் திறந்து கொண்டால்
- நரகத்தின் வாசல் மூடப்படும்
- புத்தகத்தின் புனிதம் எத்தனை பேர் அறிவர்
- மாணவர்க்கு அது கட்டாய வேலி
- காதலுக்கு அது தபால்பெட்டி
- கல்லாதானுக்கு வெறும் கானல்நீர்
- சிலருக்கு அது சேமிப்பு வங்கி
- புத்தத்தின் அவதாரம் காலந்தோறும் மாறும்
- புத்தகம் என்பது எத்தனை அற்புதம்
- அத்தனை அற்புதத்தில் காண்பது சொர்க்கம்

## வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு, ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு, ஆனால் கோபப்படாதே!
வீரனாய் இரு, ஆனால் போக்கிரியாய் இராதே!
சுறுசுறுப்பாய் இரு, ஆனால் பயப்படாதே
சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாய் இராதே
தர்மம் செய், ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத்தேடு, ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு, ஆனால் ஊதியத்தை எதிர்பராதே
கற்வனைப்போற்று ஆனால் கடமையைத் தவறாதே
வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு என்பதை மறவாதே.



அமரர்களான

திரு. திருமதி. முருகேசு தம்பதிகள்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
16
-
02
-
1927



உதிர்வு
26
-
10
-
2008

யா/ வட்டு கார்த்திகேசு வித்தியாசாலையின்
ஆசிரியை திருமதி. நிர்மலகுமாரி சண்முகமூர்த்தி
அவர்களின் பாசமிகு மாமனார்

## அமரர் சுந்தரம்பிள்ளை முருகேசு

எம் பாடசாலையில் என்றும் நிலைத்திடவே
ஆரம்பக் கல்வியை ஆணித்தரமாகக் கற்பிக்கும் ஆசிரியை
திருமதி நிர்மலகுமாரி சண்முகமூர்த்தி அவர்களின்
நிலைபிரியாக் கணவரின் பாசமிகு தந்தையார்
அமரர் சுந்தரம்பிள்ளை முருகேசு அவர்கள்
இறைபதமெய்திய செய்தி கேட்ட நாம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/வட்டு கார்த்திகேசு வித்தியாலயம்
வட்டுக்கோட்டை.

2008-10-26

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 13 - 06 - 1934

உதிர்வு 25 - 06 - 2009

## அமரர். திருமதி. முருகேசு இலட்சுமியார்

அன்பிற்கோர் உறைவிடமாய்
அறத்திற்கோர் இருப்பிடமாய்
இல்லத்திற்கோர் இனியவராய்
மனைசிறக்க வாழ்ந்தீர்
சீர்த்த பங்கியம் பூர்த்த உங்கள் மேனி
மண்ணில் வீழ்ந்த போது கலங்கினோம்
பிறந்தோர் இறப்பதும் இறந்தோர் பிறப்பதும்
இந்துமத்தின் மறுபிறவிக் கோட்பாடு
அறிவோம் ஆறுதல் பெறுவோம்.

**எமது கணித ஆசான் திரு. மு. சண்முகமூர்த்தி ஆசிரியர் அவர்களின் தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் வாடும்
பாடசாலைச் சமூகம்
யா/ பொன்னாலை வரதராஜப்பெருமாள்
வித்தியாசாலை

25-06- 2009

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
13
-
06
-
1934



உதிர்வு
25
-
06
-
2009

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. நிர்மலகுமாரி சண்முகமூர்த்தி
அவர்களின் அன்பு மாமியார்

## அமரர். திருமதி. முருகேசு இலட்சுமியார்

சீர்மிகு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மாவடியை வதிவிடமாகவும், சிறந்த நல்ல முருகேசுவை துணைவனாகவும் கொண்டு இல்லறம் எனும் நல்லறத்தில் இணைந்து நற் பிள்ளைகளைப் பெற்று நன்மனத்துடன் நற் பண்பாளர்களாக வளத்தீர்.

சாந்தமான கம்பீரமான மகனாய் சண்முகமூர்த்தியாம் சான்றோர்கள் பலரை உருவாக்கும் ஆசிரியப் பணியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தில் கணிதத்தை ஊட்டவென்றே உருவாக்கினீர். அவர் தம் இல்லாளாம் இன்முகம் காட்டும் நிர்மலகுமாரியை இல்லறம் எனும் நலலறத்தில் இணைத்தீர்.

மருமளாம் நிர்மலகுமாரியை இன்முகத்துடனும் நற்குணத்துடனும் கார்த்திகேய வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் மகனையும், மருமளையும் பேரப்பிள்ளைகளையும் ஏங்கித் தவிக்க விட்டு பரமனடி சேர்ந்த திருமதி. இலட்சுமியார் முருகேசு அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி இறைவன் கழலடியைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
பாடசாலைச் சமூகம்
யா / வட்டு கார்த்திகேசு வித்தியாலயம்
வட்டுக்கோட்டை

# நன்றி நவிலல்

கடந்த 26-10-2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வங்களான அமரர். சுந்தரம்பிள்ளை முருகேசு அவர்களினதும் 25-06-2009இல் சிவபதம் அடைந்த அவர் தம் பாரியார் அமரர். திருமதி. இலட்சுமியார் முருகேசு அவர்களினதும் மரணச் செய்தி கேட்டு உடன்வந்து அனுதாப வார்த்தைகள் கூறியதுடன் பலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்ட பாடசாலைச் சமூகத்தினருக்கும் ஈமக்கிரியைகளைச் செய்வித்த குருமார்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் அப்போது தோத்திரம் பாடிய அன்பர்கள் அனைவருக்கும் வைத்திய சேவையை வழங்கிய Dr. திரு. திருமதி. ஸ்ரீதரன் குடும்பத்தினருக்கும் இம்மலரிற்கு இரங்கலுரை வழங்கிய பெரியோர்களுக்கும் குறுகிய காலத்தில் இம்மலரினை அச்சிட்டு உதவிய சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.
வணக்கம்.

**விளாத்தித்தோட்டம்,**
**மூளாய் றோட்,**
**வட்டுக்கோட்டை.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

# வம்ச விருட்ச

சுந்தரம்பிள்ளை ❄
+
தெய்வானைப்பிள்ளை ❄

அமரர் முருகேசு ❄



தங்கேஸ்வரி
(பிரான்ஸ்)
+
பரமநாதன்

மயூரன்
+
உமா

கவிதா
+
தயாபரன்

சண்முகமூர்த்தி
+
நிர்மலகுமாரி

ரூபகாந்தன்

காந்தரூபினி

சுந்தரமூர்த்தி
(பிரான்ஸ்)
+
பராபரி

அருண்

இராகுலன்

## சை விருட்சம்

மாதவர் ❄
+
அரியநாச்சி ❄

அமரர் இலட்சுமியார் ❄



ந்தரமூர்த்தி
பிரான்ஸ்)
+
பராபரி

இராகுலன் பிரணவி

கிருஸ்ணமூர்த்தி
(பிரான்ஸ்)
+
அமிர்தாதேவி

நிஷாந் நிதுஷா நிவிந்

இராஜலிங்கம்
(பிரான்ஸ்)
+
சுபத்திரா

றமிதா கஜீபன்

❄ அமரத்துவமடைந்தவர்கள்

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Pillaiyar